செ.வெ.எண்: 32 நாள்: 24.04.2017

# அரியலூா் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்புத்திட்டங்களின் கீழ் திருமாங்கல்யத்திற்கு தங்கமும், திருமண நிதியுதவியும் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவா்கள் வழங்கினாா்.

அரியலூா் மாவட்ட ஆட்சியா் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட சமூக நலத்துறையின் சாா்பில், **மாண்புமிகு முதலமைச்சரின்** சிறப்பு திட்டங்களின் கீழ் திருமாங்கல்யத்திற்கு **தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்** கீழ் **205** பயனாளிகளுக்கு திருமண நிதியுதவியும், திருமாங்கல்யத்திற்கு தங்கமும் **மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் இன்று (24.04.2017) வழங்கினாா்.

**இவ்விழாவில் மாவட்ட ஆட்சியா் அவா்கள் தெரிவித்ததாவது:-**

சமூக நலத்துறையின், கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டம் மற்றும் ஐந்து வகையான திருமண நிதியுதவித்திட்டம் அரியலூா் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 10-ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு **ரூ.25,000/-** நிதியுதவி, **4 கிராம் தங்க காசும்** வழங்கப்பட்டுகிறது. பட்டம் படித்த பெண்களுக்கு **ரூ.50,000/-** நிதியுதவியும், **4 கிராம் தங்க காசும்** வழங்கப்பட்டு வருகிறது.

2016-2017ஆம் ஆண்டில் மூவாலூா் இராமமிா்தம் அம்மையாா் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 189 பயனாளிகளுக்கும், அன்னைதெரசா ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கும், டாக்டா் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கும் என **205 பயனாளிகளுக்கு ரூ.75 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் 820 கிராம் தங்கம்** வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்கள் முதலமைச்சரின் ஏழை பெண்ணின் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தெரிவித்தாா்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலா் திருமதி.பூங்குழலி மற்றும் அரசு அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், அரியலூா்.